DEPOSITION OF WITNESS
(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE )

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், வால்பாறை.**

**STC.No.186/2020**

**2025-ம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 16- ம் நாள் செவ்வாய்கிழமைகுற்றம் முறையிடுபவரின் அ.சா.10 -வது நபரின் வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டு 54-வது விதியின் ஏற்பாட்டின்படி) திருமதி.லட்சுமி இளநிலை உதவியாளர் நிறைவேற்றுபவர் அவர்களால் உறுதிமொழி செய்யப்படுகிறது.**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அ.சா. | - | 10 | தொழில் | - | உதவி ஆய்வாளர் |
| பெயர் | - | திரு.குமரேசன் | வட்டம் | - | பொள்ளாச்சி |
| த/பெ | - | பாண்டிமுனீஸ்வரன் | சமயம் | - | |
| கிராமம் | - | வடக்கிபாளையம் காவல் நிலையம் | வயது | - | 58/2025 |
| சாதி | - | | | | |

**<u>16-09-2025</u>**

**( எதிரி ஆஜரில்லை)**

(எதிரி தரப்பில் குவிமுச பிரிவு 317-ன் கீழான மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது)

**<u>முதல் விசாரணை:</u>**

நான் பொள்ளாச்சி வடக்கிபாளையம் காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 23-02-2020-ம் தேதி பகல் 12.30 மணிக்கு வால்பாறை காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணியில் இருந்தபோது வால்பாறை காவல் நிலைய உதவி ஆய்வாளர் திரு.உதயசூரியன் அவர்கள் கொடுத்த எழுத்து மூலமான புகாரைப்பெற்று நிலைய குற்ற எண் 52/2020, ச/பி 294(b), 323, 353, 506(i) இதசவின் படி வழக்கு பதிவு செய்தேன். **(நான் பதிவு செய்த முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ. 4 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** வழக்கு கோப்பினை விசாரணைக்காக நிலைய காவல் ஆய்வாளர் திரு.பாலமுருகன் அவர்களின் பார்வைக்கு வைத்தேன். ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:</u>**

சம்பவதினத்தன்று எத்தனை மணிக்கு ரோல் கால் நடந்தது யார் யார் அதில் கலந்துகொண்டது என்றால் தற்போது ஞாபகம் இல்லை. சம்பவதினத்தன்று நான் எத்தனை மணிக்கு பணிக்கு வந்தேன் என்றால் வழக்கமாகவே காலை 08.00 மணிக்கு வந்துள்ளேன். எத்தனை மணிக்கு சம்பவம் நடந்ததாக எத்தனை மணிக்கு யார் புகார் கொடுத்தது என்றால் 23-02-2020-ம் தேதி காலை 11.50 மணிக்கு சம்பவம் நடந்ததாக 12.30 மணிக்கு உதவி ஆய்வாளர் திரு.உதயசூரியன் புகார் கொடுத்தார். சம்பவநேரத்தில் நான் காவல் நிலையத்தில் பணியில் இருந்தேனா என்றால் ஞாபகம் இல்லை. முதல் தகவல் அறிக்கையை ஆய்வாளர் பார்வைக்கு எப்பொழுது வைத்தேன் என்றால் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தவுடனேயே ஆய்வாளர் பார்வைக்கு வைத்துவிட்டேன். சம்பவதினத்தன்று காவல் நிலையத்தில் உள்ள சிசிடிவி கேமரா பயன்பாட்டில் இருந்ததா என்றால்

பயன்பாட்டில் இருந்தது. அ.சா.1 புகார் தாரர் அன்றைய தினம் எனக்கு மேல் அதிகாரி என்றால் சரிதான். நான் சொல்லுவது போல சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றாலும், அ.சா.1 எனது மேலதிகாரி என்பதால் அவர் கொடுத்த தவறான புகாரின் அடிப்படையில் நான் முதல் தகவல் அறிக்கை பதிவுசெய்துள்ளேன் என்றால் சரியல்ல. சம்பவதினத்தன்று ஆய்வாளர் பணியில் இருந்தாரா என்றால் இருந்தார். எதிரிக்கும் இந்த வழக்கு சம்பவத்திற்கும் சம்பந்தம் அல்ல என்றால் சரியல்ல.

**மறு விசாரணை** :இல்லை

Taken down by/before me in open Court, read over/interpreted to the witness in the presence of the accused/Accused's pleader and admitted by the witness to be correct.

(ஒப்பம்) திருமதி. N.மீனாட்சி,
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், வால்பாறை.